இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

****

ஊடக அறிக்கை

**இலங்கை இந்திய சங்கம் இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது**

**அமைச்சர் சாகல ரத்நாயக்க பிரதம விருந்தினாராக கலந்து கொண்டார்**

இலங்கை இந்திய சங்கம் இந்தியாவின 73 ஆவது சுதந்திர தினத்தை செப்டெம்பர் 1, 2019 அன்று கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் கொண்டாடியது. இலங்கை துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்நாயக்க பிரதம விருந்தினராகவும், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்கள் கௌரவ விருந்தினராகவும் வைபவத்தில் கலந்து கொண்டனர் . இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி , நீதியரசர் எஸ்.துரைராஜா, இலங்கை இந்திய சங்கத்தின் தலைவர் T.S.பிரகாஷ், இராஜதந்திர சமூக உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களும் இந்த வைபவத்தில் பிரசன்னமாக இருந்தனர்.

வைபவத்தில் பேசும் போது, கௌரவ. சாகல ரத்நாயக்க நூற்றாண்டுகள் பழமையான கலாசாரப் பிணைப்புகள், பகிர்ந்து கொள்ளும் நலன்கள் மற்றும் சாதாரண வாழ்க்கை முறை என்பவற்றால் காண்பிக்கபடும் இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான விசேட பிணைப்பை வலியுறுத்திக் காட்டினார். மகிந்த தேரர் இலங்கைக்கு விஜயம் செய்து தேவநம்பியதீசன் மன்னரைச் சந்தித்த போது இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பௌத்த மதம் - இலங்கைக்கு இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற மிகப் பெரிய வெகுமதியென விசேட கவனத்தை தனதுரையில் எடுத்துக் கூறினார் . மலையகம் மற்றும் தெற்கில் தோட்டத் தொழிலாளர்களுக்காக 14000 வீடுகளைக் கட்டும் வீடமைப்பு செயல்திட்டம், 1990 சுவசெரிய நோயாளர் காவுவண்டிச் சேவை போன்ற இலங்கையில் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கி இந்திய அபிவிருத்தி உதவிகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் மக்கள் நலன் சாரந்த பல்வேறு அபிவிருத்தி செயல்திட்டங்கள் பற்றி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்திய உயர் ஸ்தானிகர் தனது உரையில் , இந்தியாவில் அண்மையில் முடிவடைந்த பொதுத் தேர்தல் மனித வரலாற்றில் மிகப் பெரிய ஜனநாயக அப்பியாசம் என்பதையும் அது தற்போதைய கொள்கைகள் மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்வதற்கு சார்பாக ஒரு மிகப் பெரிய ஆணையைக் கொடுத்தது என சுட்டிக்காட்டினார். ஏழு தசாப்த கால சுதந்திரத்தில், இந்திய தொழிலநுட்ப நிறுவகம் மற்றும் இந்திய முகாமைத்துவ நிறுவகம் போன்ற மிகச் சிறந்த பல பிரசித்தமான கல்வி நிலையங்களை இந்தியா கட்டியுள்ளதுடன் அவை இன்று உலகில் தலை சிறந்தவற்றில் ஒன்றாக உள்ளன என உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார் . சந்திரன் மற்றும் செவ்வாய்க்கும்

கூட இந்தியா விண்கலங்களை அனுப்பியுள்ளதுடன் இன்று சர்வதேச தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி கூட்டுத் தாபனங்களைத் தலைமை வகிக்கும் மனங்களையும் உருவாக்கியுள்ளது என்றார்.

இலங்கையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் போது ஜிகாதிப் பயங்கரவாதம் அதன் கோரமான தலையை தூக்கியதானது , வெறுமனே இலங்கைக்கு எதிரான ஒரு தாக்குதலாக மட்டுமன்றி , எல்லா மனிதப் பிறவிகளுமே ஒன்றே என நம்பும் அனைத்து மனிதாபிமானத்திற்கும் எதிரானது என உயர் ஸ்தானிகர் கூறினார் . இந்த நெருக்கடியான தருணங்களில் இலங்கையுடன் இந்தியா உள்ளது என்பதை வலியுறுத்திக் காட்டுவதற்கு ஈஸ்டர் தாக்குதல்களின் பின் ஒரு ஒருமைப்பாட்டு விஜயத்தை இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது உலகத் தலைவர் இந்தியப் பிரதம மந்திரியாவர் என உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார். இலங்கையின் பலம்; இலங்கையின் மீளெழும் தன்மை ; எழுவதற்கான இலங்கையின் ஆற்றல் மற்றும் அதன் அனைத்து மேன்மைகளுக்குமாக எழுதல் என்பவற்றை இந்தியா தொடர்ந்து நம்புகின்றது எனச் சுட்டிக்காட்டிய உயர் ஸ்தானிகர் இந்திய சுற்றுலாப் பயணிகள் மீண்டும் இலங்கையில் பெரும் எண்ணிக்கையில் வருவதையும், இலங்கைப் பொருளாதாரத்திலுள்ள அனைத்து விநியோகச் சங்கிலிகளையும் முன்கொண்டு செல்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டார் . இந்திய நிறுவனங்கள் இலங்கையில் மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றில் முழுமனதோடு பங்குபற்றுவதையும் மற்றும் கணிசமான முதலீடுகளை மேற்கொள்வதையும் தொடர்கின்றன.

இலங்கையின் சொந்த முன்னுரிமைகள் மற்றும் தேவைகளின் படியே , இலங்கையுடன் பங்காண்மை கொள்வதற்கு இந்தியா பற்றுறுதி கொண்டுள்ளது என உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார் . கடந்த சில வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட நிகழ்வுகளை ஒழுங்கேற்பாடு செய்வதில் ; திரு. T.S.பிரகாஷ் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு மிகவும் முனைப்பாக செயற்படுவதையும் உயர் ஸ்தானிகர் பாராட்டினார்.

கொழும்புஇ இந்திய கலாச்சார நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் திரு. ஆ.ராமச்சந்திரனால் எழுதப்பட்ட 'Ritualistic visual traditions : Sri Lanka and Kerala' எனும் தலைப்பிலான ஒரு நூலும் இந்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்தியா மற்றும் இலங்கையின் சுதந்திரங்களுக்கு உடன் பின்னதாக , 1949 இல் ஸ்தாபிக்கப்பட்ட, இலங்கை இந்திய சங்கம் இலங்கையிலுள்ள மிகவும் பழமையானதும் மற்றம் பெரியதுமான நட்புச் சங்கமாகும்.

*****